இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 27-10-2024

# திராவிடமும் தமிழும்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும் - என்று நாம் சொன்னால் - சில திருகல்காரர்கள் - ‘தெக்கணமும் அதிற்சிறந்த தமிழ்த்திரு நல் நாடும்’ என்று சொல்கிறார்கள். அவர்களைப் பார்த்து சிரிப்பே வருகிறது!

திராவிட நல் திருநாடும் - என்று சொல்லும் நாம், ‘தமிழ்த் திருநாட்டுக்கு’ எதிரானவர்கள் அல்ல. இந்த மாநிலத்துக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டிய ஆட்சியே ‘திராவிட’ முன்னேற்றக் கழக ஆட்சி தான்!

**18.7.1967 அன்று தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னான நாள். இதோ பேரறிஞர் அண்ணா - முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகிறார்கள்...**

**“சட்டமன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்ற இந்த நாளில் “தமிழ்நாடு” என்று நான் சொன்னதும் “வாழ்க” என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.**

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு!**

**உறுப்பினர்கள் : வாழ்க!!**

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு!**

**உறுப்பினர்கள் : வாழ்க!!**

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு!**

**உறுப்பினர்கள் : வாழ்க!!**

**- இதை எல்லாம் செய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர வேண்டி இருந்தது. பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வர வேண்டி இருந்தது.**

மொழிவாரியாக 1956 ஆம் ஆண்டு மாகாணங்கள் அமைந்து சென்னை மாகாணத்தில் இருந்த ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகள் பிரிந்த பிறகு அன்றைய மதறாஸ் மாகாணத்துக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டுவதற்கான கிளர்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியது. ‘இனியும் தமிழ்நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டாமல் இருப்பதைப் பார்த்துக் கொண்டு நான் ஏன் இனியும் உயிரோடு இருக்க வேண்டும்?” என்று கேட்டார் தந்தை பெரியார் அவர்கள்.

6.2.1956 அன்று சென்னையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், கழகப் பொதுச்செயலாளர் பேரறிஞர் அண்ணா கலந்து கொண்டார். “சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தும், கேரள மாநிலத்துடன் சேர்க்கப்பட்ட எல்லைத் தமிழ்ப்பகுதிகளை தமிழ்நாட்டுடன் சேர்த்தும், மாநிலப் புது அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சட்டசபை உறுப்பினர்களையும் அரசையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது” என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தி.மு.க. பங்கெடுத்தது. இத்தீர்மானத்தை அன்றைய ஒன்றிய அரசு மதிக்கவில்லை.

இந்தக் காலக்கட்டத்தில் கழகம், சட்டசபையில் இல்லை. ஆனால் கழக ஆதரவுடன் வெற்றி பெற்ற உறுப்பினர் ஏ.கோவிந்தசாமி அவர்கள் இருந்தார்கள். அவர், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 28.3.1956 அன்று வாதாடினார். 1956 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாளை ‘தமிழ்நாடு அமைப்பு நாள்’ என்று கொண்டாடினார் பேரறிஞர் அண்ணா. 1956 மே மாதம் திருச்சியில் கூடிய தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில், ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்படாததைக் கண்டித்து தீர்மானம் போடப்பட்டது. இந்தத் தீர்மானத்தை பேராசிரியர் க.அன்பழகன், புதுவை சிவப்பிரகாசம், கலையழகன், சுப்பையா, வாணிதாசன் ஆகியோர் கொண்டுவந்தார்கள்.

16.11.1957-ல் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் சென்னை வரும் பிரதமர் நேருவுக்கு கருப்புக் கொடி காட்ட மீண்டும் முடிவெடுக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், ‘தமிழ்நாடு’ என்ற தனித்தலைப்பில் தி.மு.க. நிலைப்பாடு சொல்லப்பட்டது.

“தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி போன்ற தமிழ்ப்பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படுவதற்கும், சென்னை மாநிலத்திற்குத் ‘தமிழ்நாடு’ எனப் பெயரிடப்படுவதற்கும் முயற்சிக்கப்படும். இருமொழி, மும்மொழி, மாநில அமைப்பு ஏற்பாட்டினை எதிர்த்துப் போராடும்” என்று சொல்லப்பட்டது.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பூபேஷ் குப்தா அவர்கள் ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதன் மீது நடந்த விவாதத்தில் அப்போது மாநிலங்களவை உறுப்பினராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் ப.உ.சண்முகம் இக்கோரிக்கையை வைத்தார். இதையொட்டிப் பேசிய தலைவர் கலைஞர் அவர்கள், “...உறுப்பினர் ப.உ.சண்முகம் அவர்கள் கூறியது போல நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைக்கவில்லை, உதகையிலுள்ள ஒரு வீட்டுக்கு ‘தமிழகம்’ என்று கனம் அமைச்சர் சுப்பிரமணியம் வைத்துள்ளார். நாட்டுக்கு வைக்க வேண்டிய ஒரு பெயரை ஒரு வீட்டுக்கு வைத்திருக்கிறார். ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது.**

**உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம். ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்குப் பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்....” (தமிழ்நாடு சட்டமன்றத்தில் 10.8.1960 அன்று ஆற்றிய உரை) என்று கோரிக்கை வைத்தார்.**

1961 சனவரி 30 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் சின்னத்துரை ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டும் தீர்மானத்தைக் கொண்டுவந்து உரையாற்றினார். சின்னத்துரையின் தீர்மானத்தின்மீது விவாதம் நடந்தது. தி.மு.க. சார்பில் இதனை ஆதரித்து பேராசிரியர் அன்பழகன் பேசினார்.

1962 - சூலை 27 : ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்ட தி.மு.க. உறுப்பினர் கே.ஏ.மதியழகன் சட்டமன்றத்தில் கோரிக்கை எழுப்பினார். “தமிழ்நாடு என்று ஏன் பெயர் சூட்டவில்லை?” என்று கேட்டார். “ஏன் தயங்குகிறீர்கள்?” என்று 1964 ஆம் ஆண்டும் கேட்டார் மதியழகன்.

1964 - சூலை 23 : ‘தமிழ்நாடு’ என்று பெயரிடும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் - என தி.மு.க. உறுப்பினர் இராம. அரங்கண்ணல் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 23.7.1964 அன்று தி.மு.க. உறுப்பினர்கள் நாவலர் நெடுஞ்செழியனும் புலவர் கா.கோவிந்தனும் வலியுறுத்திப் பேசினார்கள்.

இவை எல்லாம் இன்று கதறும் கத்துக்குட்டிகளுக்குத் தெரியாது. திராவிட - தமிழ் ஆகிய இருசொற்களும் ஒரே பொருளைத் தருபவைதான்.

**இப்போது பிரச்சினை, தமிழ்த்தாய் வாழ்த்தில் வரியை ஏன் நீக்கினார்கள் என்பதுதானே தவிர, புதுப்பாட்டில் என்ன வரியைப் போடுவது என்பது அல்ல!**

## ‘முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின்’ கீழ் – ‘பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்’ 19 இளம் வல்லுநர்களுக்கு – முதுகலைச் சான்றிதழ்கள்!

# உங்கள் திறமையும் அறிவும் இந்தச் சமூகத்துக்கு இன்னும் அதிகமாகப் பயன்படட்டும்!

## இளம் வல்லுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் (Tamil Nadu Chief Minister’s Fellowship Programme), இரண்டு வருடம் முழுமையாக நிறைவு செய்த 19 இளம் வல்லுநர்களுக்கு “பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்” (Post Graduate Certificate in Public Policy and Management) முதுகலைச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு. பிரதாப், பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் ஆசித் கே. பர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக். 27 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் 19 இளம் வல்லுநர்களுக்கு “பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்” முதுகலைச் சான்றிதழ்களை வழங்கி, அவர்களை வாழ்த்தி உரையாற்றுகையில், “உங்கள் (சான்றிதழ் பெற்ற இளம் வல்லுநர்கள்) திறமையும் - அறிவும் இந்தச் சமூகத்துக்கு இன்னும் அதிகமாகப் பயன்படட்டும்!” என்று குறிப்பிட்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் (Tamil Nadu Chief Minister’s Fellowship Programme), இரண்டு வருடங்கள் முழுமையாக நிறைவு செய்த 19 இளம் வல்லுநர்களுக்கு “பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்” (Post Graduate Certificate in Public Policy and Management) முதுகலைச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு CM’s Fellowship Programஐ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள உங்களுக்கு, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூலமாக Post Graduate Certificate in Public Policy and Management எனும் முதுகலைச் சான்றிதழை - PG Certificationஐ வழங்குவதில் நான் மிகுந்த பெருமையடைகின்றேன், மகிழ்ச்சி அடைகிறேன். உங்களை வாழ்த்துகின்றேன்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை, ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற திராவிட மாடல் தத்துவத்தை முன்னிறுத்திச் செயல்படுகின்ற அரசு. மக்களுக்கான தேவைகளை அறிந்து, அவற்றிற்கான தீர்வுகளை இன்னும் வேகமாக அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், TN CM’s Fellowship Programஐ கடந்த 2022 ஆம் ஆண்டு துவங்கி வைத்தார்கள்.

இந்தத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட 24 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், இரண்டு கட்டத் தேர்வு மற்றும் இன்டர்வியூ நேர்காணலின் அடிப்படையில் 30 பேர் தேர்வு செய்யப்பட்டீர்கள். அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி Anna Administrative Staff College மூலம், தமிழ்நாடு அரசே அரசுத்துறை செயல்பாடுகள் குறித்த பயிற்சிகளை உங்களுக்கு வழங்கியது.

அதனடிப்படையில், நம்முடைய தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் சிறப்புத்திட்டச் செயலாக்கத்துறையின் ஒருங்கிணைப்பில், நீங்கள் அனைவரும் மிகவும் சிறப்பாக செயல்பட்டீர்கள். சொல்லப்போனால் இது ஒரு Mutual Benefit புரோகிராம். அரசால் உங்களுக்கும், உங்களால் அரசுக்கும் பலன் அளிக்கும் வகையில் தான் இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார்கள்.

### மக்களுக்கும் - அரசுக்கும் பாலம்!

நீங்கள் அனைவரும், மக்களுக்கும் - அரசுக்கும் ஒரு பாலமாக இருந்து, பல்வேறு Innovative ஐடியாக்களையும், அதற்கான தீர்வுகளையும் தந்தீர்கள்.

வீட்டு வசதித்துறை - சமூகநலத் துறை நீர்வளத்துறை - மருத்துவத் துறை - விளையாட்டு மேம்பாட்டுத் துறை என பல்வேறு துறைகளில் நீங்கள் திறமையுடன் செயல்பட்ட விதம் குறித்து நான் நன்கு அறிவேன்.

நேற்றுக்கூட, நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாக ‘முதலமைச்சர் கோப்பை 2024 நிறைவு விழா நடைபெற்றது. முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கான, அந்த கேப்சன்ஸ் ‘களம் நமதே’ , ‘இது நம்ம ஆட்டம்’ என்ற வார்த்தைகளை பரிந்துரைத்து, அவற்றை தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் பட்டிதொட்டி எங்கும் கொண்டு சேர்க்க துணை நின்றவர்கள் நீங்கள் தான். தமிழ்நாடு CM’s Fellowshipல் இணைந்த உங்களுக்கு, கடந்த இரண்டு ஆண்டு காலமாக மாதம் 65 ஆயிரம் ரூபாய் அளவுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, உங்கள் இதர செலவினங்களுக்காக மாதம் 10 ஆயிரம் ரூபாயை நம்முடைய கழக அரசு வழங்கியது. இந்தியாவிலேயே இந்த அளவுக்கு, ஊதியத்தை போன்றதொரு உதவித் தொகையை அளித்து, Fellowshipம் தருகின்ற ஒரே மாநிலம், நம்முடைய தமிழ்நாடு மட்டும் தான்.

இந்த சிறப்புக்குரிய திட்டத்தில் இணைந்து பணியாற்றும் போதே, சிலருக்கு ஒன்றிய அரசுப்பணி, மாநில அரசுப்பணி போன்ற பணி வாய்ப்புகள் கிடைத்தன. கிட்டத்தட்ட மாதம் 2 லட்சம் ரூபாய் அளவுக்கு ஊதியத்துடன் கூட சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. சிலர் அந்தப்பணிகளுக்கு சென்றாலும், Fellowshipஐ முழுமையாக நிறைவு செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டவர்கள்தான் நீங்கள். அந்த வகையில், இங்கே இருக்கின்ற நீங்கள் அனைவரும் அரசினுடைய பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள்.

### நம் அரசின் மூலம் பெற்ற அனுபவம்!

இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூலமாக PG Certification முடித்து வெளியேறுகிறீர்கள் என்றால், இந்த 2 ஆண்டுகளில் நம் அரசின் மூலம் பெற்ற அனுபவத்தோடு மக்களை நோக்கி நீங்கள் அனைவரும் செல்கிறீர்கள் என்று தான் அர்த்தம். உங்கள் திறமையும் - அறிவும் இந்த சமூகத்துக்கு இன்னும் அதிகமாக பயன்படட்டும்.

தமிழ்நாடு CM’s Fellowship Programக்கு அடுத்த பேட்ச் மாணவர்களை விரைவில் தேர்ந்தெடுக்கவுள்ளோம். ஆகவே, அவர்களுக்கும் நீங்கள் வழிகாட்டலாம். நீங்கள் எப்போதும் நம்முடைய அரசுடன் இணைந்து செயல்படலாம் என்று கேட்டுக் கொள்கின்றேன். முதலமைச்சருடைய புத்தாய்வுத் திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ள உங்கள் அனைவரின் வாழ்விலும் புத்தொளி பரவட்டும். எதிர்காலம் சிறக்கட்டும். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் 2022-2024 கீழ் (Tamil Nadu Chief Minister’s Fellowship Programme) இரண்டு வருடம் பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த 19 இளம் வல்லுநர்களுக்கு “பொதுக்கொள்கை மற்றும் மேலாண்மையில்” முதுகலைச் சான்றிதழ்கள் (Post Graduate Certificate in Public Policy and Management) வழங்கும் நிகழ்ச்சியில், பயிற்சியை நிறைவு செய்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஆர்.சந்துரு தனது பயிற்சி மற்றும் அனுபவங்கள் குறித்து விளக்கினார். இந்நிகழ்ச்சியில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் ஆசித் கே. பர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.